Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. யோசுவா 1:5

Vol. 71 கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? சங்.27:1 ஏப்ரல் 2025 No.4

சிட்சை
Chastisment

Andrew Murray (1828 - 1917)

"நீர் தீங்கு நாட்களில் அமர்ந்திருக்கப்பண்ணி, சிட்சித்து, உம்முடைய வேதத்தைக் கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்" சங்.94:12,13.

"நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்... நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்கிறேன்" சங்.119:67-71.

"...இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக் காகவே நம்மை சிட்சிக்கிறார்" எபி.12:10.

"என் சகோதரரே நீங்கள் பலவித மான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாய் எண்ணுங்கள்" யாக்.1:2-3.

ஒவ்வொரு தேவ பிள்ளையும் எப்படியும் சோதனைப் பாடசாலையில் பிரவேசித்துதான் ஆக வேண்டும். சிட்சை அனுபவத்தைத் தருகிறது. சோதனையின் போது நாம் சந்தோஷப்பட வேதம் நமக்குக் கற்பிக்கிறது. சிட்சை மூலம் பிதாவினால் போதிக்கப்பட்டு சுத்திகரிக் கப்படுவது பரலோக ஆசீர்வாதம்.

சோதனை ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவதில்லை. விதையில்லாத நிலத்தை உழுவதாலும் நீர்ப்பாய்ச்சுவ தாலும் பலன் இல்லை. தேவ பிள்ளை களும் இவ்வாறு சோதனையால் ஆசீர் வதிக்கப்படுவதில்லை. இருதயம் சில வேளைகளில் மிருதுவாகிறது. ஆனால் நிலைத்திருக்கும் ஆசீர்வாதத்தைப் பெறுவது எப்படி? சோதனையில் பிதா தமது எண்ணத்தில் எதைக் கொண் டிருக்கிறார் என்று அறிவது அவசியம்.

சோதனையாகிய பள்ளியில் முக்கியமான நான்கு காரியங்களுண்டு. அவை திட்டமான நோக்கம், ஒரு நல்ல பாட புத்தகம், ஒரு நல்ல ஆசிரியர், கல்வியை விருப்பத்தோடு கற்றுக் கொள்ளும் மாணவன்.

1. சோதனையின் நோக்கம் உங்களுக்குத் தெளிவாயிருக்கட்டும்

பரிசுத்தம் பிதாவுக்கு உயரிய மகிமையாக இருப்பது போல் பிள்ளை களுக்கும் இருக்க வேண்டும். அவர் நம்மைத் தண்டிப்பதால் அவரது பரிசுத்தத்துக்குப் பங்காளிகளாகிறோம். சோதனையில் விசுவாசி எதிர்பார்ப்பது ஆறுதல். அவன் அமைதியாயிருந்து இந்த விசேஷித்த தண்டனைக்காக திருப்தியாயிருக்கிறான். இது துவக்கம் மட்டுமே. பிதா இன்னும் உயர்வான ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறார். அவர் அவனை மிக தூயவனாக வாழ்நாள் முழுவதும் இருக்கும்படி ஆக்க விரும்பு கிறார். யோபு, 'கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்தரம்' என்றான் யோபு 1:21. அது அவனுடைய சோதனைப் பள்ளியின் ஆரம்பம். கர்த்தர் அவனுக்கு இன்னும் போதிக்க வேண்டியதிருந்தது. நமது சித்தம் எல்லாவற்றிலும் அவருடைய தூய சித்தத்தோடு இணைந்திருக்க வேண்டும். அவர் தமது தூய ஆவியால் நம்மை நிரப்ப விரும்புகிறார். அவரது தூய்மையால் நாம் நிரப்பப்பட வேண்டும் என்பதே தேவ நோக்கம். இதுவே உங்கள் நோக்கமாகவுமிருக்க வேண்டும்.

2. முக்கியமாக சோதனை காலத்தில் வேதவசனம் நீங்கள் வாசிக்கிற புத்தகமாயிருக்க வேண்டும்

தேவன் நமது சோதனைகளிலும் துன்பங்களிலும் அவரது வசனத்தைப் போதிக்க விரும்புகிறார். ஏன் அவர் உங்களைத் தண்டிக்கிறார், எவ்வளவு ஆழமாக உங்களை நேசிக்கிறார், எவ்வளவு அவரது வாக்குத்தத்தங்கள் அறுதலளிக்கின்றன. சோதனை பிதா வின் வாக்குத்தத்தங்களுக்கு புதிய மகிமையைத்தரும். தண்டிக்கப்படும்போது ஆலோசனைக்காக வேதவசனங்களைப் படியுங்கள்.

3. இயேசுவே உங்கள் ஆசிரியராக இருக்கட்டும்

அவரே பாடுகள் மூலம் சுத்திகரிக் கப்பட்டார். பாடுகள் மூலமாகவே முழு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். அவருக்கு அதிசயமான உருக்கமுள்ள இருதயம் இருக்கிறது. அவரோடு அதிக உறவு கொள்ளுங்கள். பிறருக்கு சொல்லப்பட்ட வார்த்தைகளிலிருந்து ஆறுதலடைய முயற்சிக்க வேண்டாம். இயேசு உங்களுக்குப் போதனைதர அனுமதியுங்கள். தனிமையில் அவரோடு சம்பாஷித்து அடிக்கடி தியானம் செய்யுங்கள். பிதா நமக்கு வார்த்தை யையும் ஆவியையும் ஆண்டவராகிய இயேசுவையே நமக்கு தந்திருக்கிறார். நீங்கள் அவருக்காக பிரித்தெடுக்கப்பட்ட வர்கள். துன்பங்களும் தண்டனையும் உங்களை வசனத்துக்கு நேராக, இயேசு வுக்கு நேராகக் கொண்டு வர வேண்டும். அவர் தமது பரிசுத்தத்துக்கு உங்களைப் பங்காளியாக்குவார். இயேசுவோடுள்ள உறவு தானாக உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

4. விருப்புடன் கற்கும் மாணவராயிருங்கள்

உங்கள் அறிவீனத்தை ஒத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு தேவ சித்தத்தைப் புரிந்து கொள்ள முடியும் என்று எண்ண வேண்டாம். துன்பங் களில் நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டி யவைகளை எதிர்பார்த்துக் கேளுங்கள். சாந்தகுணமுள்ளவர்களுக்கு போதிக்கும் மற்றும் ஞானத்தின் வாக்குத்தத்தம் இருக்கிறது. செவிகளைத் திறந்து வைக்க நாடுங்கள். இருதயம் அமைதலாகவும் தேவனுக்கு நேராகவும் இருக்கட்டும். பிதாவே நம்மை சோதனைப் பள்ளியில் வைத்திருக்கிறார். முழு விருப்பத்தோடு அவர் சொல்வதைக் கேளுங்கள். அவர் போதிப்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். அவர் இதில் உங்களை மிக அதிகமாக ஆசீர்வதிப்பார்.

"கர்த்தாவே நீர் சிட்சித்து உம்முடைய வேதத்தைக் கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்" சங்.94:12.

"என் சகோதரரே நீங்கள் பலவித மான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறை வுள்ளவர்களாயிராமல் பூரணராயும் நிறை வுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறு மையானது பூரண கிரியை செய்யக் கடவது" யாக்.1:2,4. சோதனை காலத்தை பாக்கியமான காலமாக எண்ணுங்கள். அதோடு பிதாவோடு நெருங்கிய உறவு கொள்ளும் காலமாகவும் அதனால் அவரது பரிசுத்தத்துக்குப் பங்காளிகளாக வுமிருக்கிறீர்கள். நீங்கள் மகிழ்வுடன் "நான் துன்பப்பட்டது நல்லது" என்பீர்கள்.

பிதாவே, எங்கள் வாழ்வில் இருண்ட சோதனைகள் வரும் போது உமது வசனம் காண்பிக்கும் மகிமையான ஒளிக்காக நன்றி சொல்லுகிறேன். நீர் இதன் மூலம் என்னை போதித்து உமது பரிசுத்தத்தின் பங்காளியாக்குகிறீர். நீர் உமது சொந்த குமாரனுடைய பாடுகளை யும் மரணத்தையும் அனுபவிக்கச் செய்து அதன் மூலம் பரிசுத்தத்தை எனக்கு அருகில் கொண்டு வந்தீரே. உமது பரிசுத்த தத்தின் பங்காளியாக மாற உமது தண்ட னையை விருப்பத்தோடு ஏற்றுக் கொள் கிறேன். உமது விலையேறப் பெற்ற பணிக்காக நன்றி. உமது ஆலோசனையை மட்டும் என்னில் நிறைவேற்றும்.

உள்ளே .....
வேத புத்தகத்தில் அழுத 7 பேர்

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங். 85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? எரேமியா 32:27.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 ஏப்ரல் மாத தூதனுக்காக என் தேவனை நன்றி யோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கி றேன்.

1. அன்பான வருகையின் தூதன் வாசகர் அனை வருக்கும் ***ஜெப கடிதம்*** (Prayer Letter) ஒன்றை அனுப்புகிறோம். மூன்று மடிப்புகளுள்ள (Three folding) அந்த கடிதத்தின் முதல் பக்கம், தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்கள் எவை களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று எழுதியிருந்தேன். பின் பக்கம், நான் எவைகளுக்காக ஜெபிக்கிறேன் என்று அச்சிட்டிருந்தேன். இன்னொரு பக்கம் '***எழுப்புதலின் திறவுகோல்***' என்ற மிக அருமையான, 'ஜெபிக்கும் மக்களின் கண்ணீர் வெள்ளத்தால் அன்றி எழுப்புதல் ஏற்படாது' என்ற தேவ செய்தியை அச்சிட்டிருந்தேன்.

கடிதத்தின் உள்பக்கத்தில், 2025-ம் ஆண்டின் காலண்டர் அச்சிட்டிருந்தோம். நீங்கள் தினந்தோறும் ஜெபிக்கவும், தேவ ஊழியர் தங்கள் ஊழியங்களை ஒழுங்கு செய்யவும் இந்த காலண்டர் மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

2. "சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது" (ரோமர் 10:1) என்றெழுதுகிறார் பவுல். ***இந்தியா*** இரட்சிக்கப்படவேண்டும் என்று நாம் ஒவ்வொரு நாளும் ஜெபிப்பதற்காக, 3-வது பதிப்பாக ***ஜெப கையேடு*** ஒன்றை அச்சிட விரும்புகிறோம். ஒவ்வொரு தியதிக்கும் (Date) ஒரு மாநிலமும், ஒரு பாடலும் அச்சிடப்பட்டிருக்கும். 31 நாட்களுக்கு 31 மாநிலமும், 31 பாடலும், ஆக 62 பக்கங்கள் அடங்கிய இந்த புத்தகம் விரைவில் வெளிவர ஜெபிக்கும்படி அன்போடு கேட்கிறோம்.

3. அமெரிக்காவில் ஹாலிவுட் (Holly wood) திரைப்படத் துறையினர் கூடுகை ஒன்றில் No God (தேவன் இல்லை) என்று பேசினதை நாம் அனைவரும் ஊடகங்கள் வழியாக பார்த்தோம். சரியாக 48 மணிநேரத்தில் அவர்கள் குடியிருந்த பகுதி முழுவதும் கடுமையான, கட்டுக்கடங்காத, காட்டுத் தீயினால் எரிந்து சாம்பலானதையும் கண்டோம். சினிமா துறையை சேர்ந்த ஐசுவரியவான்களாகிய அவர்களுடைய வீடுகள், தீ பற்றி எரிய முடியாதவைகளாக (Fire proof) கட்டப் பட்டிருந்தன. ஆனால் அந்த வீடுகளும், அவர்கள் உடமை களும், வாகனங்களும் சாம்பலாயின.

அப்பொழுது லோத்து புறப்பட்டு, தன் குமாரத்திகளை விவாகம் பண்ணப் போகிற தன் மருமக்கள்மாரோடே பேசி: நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள்; கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப் போகிறார் என்றான்; அவனுடைய மருமக்கள்மாரின் பார்வைக்கு அவன் பரியாசம் பண்ணுகிறதாகக் கண்டது.

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக் கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் பொழிந் தருளும், ஆமென். ரோ. 8:26; எபி. 5:7; சகரியா 12:10.

அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோ ராவின் மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி,

அந்த பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத் தையும், அந்த பட்டணங்களின் எல்லாக்குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார் ஆதி.19:14,24,25.

இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலே ***அக்கினிக்கு*** இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது 2பேதுரு 3:7.

வேத புத்தகத்தில் அழுத 7 பேர்

1. சத்துமிட்டு அழுதாள்

ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து, ஆகாருடைய தோளின் மேல் வைத்துப் பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து, அவளை அனுப்பி விட்டான்; அவள் புறப்பட்டுப் போய், பெயர் செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள்.

துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்த பின்பு, அவள் பிள்ளையை ஒரு செடியின் கீழே விட்டு,

பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து ***சத்தமிட்டு அழுதாள்*** ஆதி.21:14-16.

...she said, Let me not see the death of the Child, And she sat over against him, and lift up her voice and wept.

அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக் குத்தா என்றார்.

(3-ம் பக்கம் பார்க்க)

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்.

இயேசு அவளுக்குப் பிரதியுத்தர மாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத் துக்குதா என்று உன்னிடத்தில் கேட்கி றவர் இன்னார் என்பதையும் அறிந்திருந் தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டி ருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார் யோவான்4:8-10.

இந்த செய்தியை எழுத ஆயத்த மான ஜனவரி மாதத்தில் "**கும்பமேளா**" என்ற நிகழ்ச்சி நடந்ததை வாசகரில் சிலர் பார்த்திருப்பீர்கள். சுமார் 60 கோடி மக்கள் புனித நீராடுவதற்காக அங்கே கூடி வந்தார்கள். அவர்களில் சிலர் கூட்ட நெரிசலில் சிக்கி மரித்து போனார்கள்.

அன்பான தேவனுடைய பிள்ளைகளே, நம் இந்திய தேச மக்கள் ***ஜீவ தண்ணீராகிய*** இயேசுவை அறியாமல் தாகத்தினால் மடிந்து போகிறார்களே! பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று சத்தமிட்டு அழுத ஆகாரை போல, அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக, நம் இந்திய தேச மக்களுக்காக சத்தமிட்டு அழுவீர்களா?

ஆத்தும இரட்சிப்பிழந்தவர்
ஆயிரம் ஆயிரமாய்
அன்டாடகம் இந்த மண்ணடியில்
அழிந்து சாகின்றாரே

பாவம் பெருகுதே
பாரும் பரன் இயேசுவே
அழியும் மனுக்குலம்
அதையும் இரட்சிப்பீரே

2. அவன் சத்தமிட்டு அழுதான்

கானான் தேசத்திலே பஞ்சம் உண்டாயிருந்தபடியால், தானியம் கொள்ள போகிறவர்களுடனே கூட இஸ்ரவேலின் குமாரரும் போனார்கள்.

யோசேப்பு அத்தேசத்துக்கு அதிபதியாயிருந்து, தேசத்தின் ஜனங்கள் யாவருக்கும் விற்றான்; யோசேப்பின் சகோதரர் வந்து, முகங்குப்புறத் தரை யிலே விழுந்து அவனை வணங்கி னார்கள்.

யோசேப்பு அவர்களைப் பார்த்து, தன் சகோதரர் என்று அறிந்து கொண் டான்; அறிந்தும் அறியாதவன் போலக் கடினமாய் அவர்களோடே பேசி: நீங்கள் எங்கேயிருந்து வந்தீர்கள் என்று கேட் டான் ஆதி.42:5-7.

பிற்பாடு யோசேப்பின் பான பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டது ஆதி.44:12. யோசேப்பு: எவன் வசத்தில் பாத்திரம் கண்டுப் பிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாயிருப் பான் என்றான் 44:17.

அப்பொழுது யூதா அவனண்டை யிலே சேர்ந்து: ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உம்முடைய செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்பீராக; அடியேன் மேல் உமது கோபம் மூளாதிருப்பதாக; நீர் பார்வோ னுக்கு ஒப்பாயிருக்கிறீர்.

இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடே கூடப் போக விடும் படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியேனாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன்.

இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்திற்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான் ஆதி.44:18-34.

யூதாவின் ***மன்றாட்டு ஜெபம்*** நமக்கு ஒருஅவசரமானசெய்தியைஅளிக்கிறது. நம்முடைய தேச ஜனங்களுக்கு நாம் உத்தரவாதிகளல்லவா?

அவன் (யோசேப்பு) ***சத்தமிட்டு அழுதான்***; அதை எகிப்தியர் கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள் ஆதி.45:2.

அழியும் ஆத்துமாக்களுக்காக நீங்கள் சத்தமிட்டு அழுவதை உங்கள் வீட்டார் கேட்கிறார்களா? உங்கள் பிள்ளைகள் உங்களைப் பார்த்து: அப்பா, அம்மா, நீங்கள் இரவில் ஏன் சத்தமிட்டு அழுதீர்கள் என்று கேட்கிறார்களா?

உற்றார் பெற்றாரும் குடும்பங்களும்
மற்றும் பலர் மாள்வதைக்
கண்டுசகித்திடாதென்றும்ஜெபித்திடும்
கண்ணீர் ஜெபம் கேளுமே

இரங்குமே என் இயேசுவே
இரக்கத்தின் ஐஸ்வரியமே
கூவி கதறியே இராவும் பகலுமே
கெஞ்சும் ஜெபம் கேளுமே

3. அவன் சலித்துப் போகுமட்டும் அழுதான்

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் வியாதியாயிருந்தான்; எலிசா தமஸ்குவுக்கு வந்தான்;

ராஜா ஆசகேலை நோக்கி: நீ உன் கையில் ஒரு காணிக்கையை எடுத்துக் கொண்டு, தேவனுடைய மனுஷனுக்கு எதிர்கொண்டு போய், நான் இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று அவனைக் கொண்டு கர்த்தரிடத்தில் விசாரிக்கச் சொன்னான்.

எலிசா அவனை நோக்கி: நீ போய், வியாதி நீங்கிப் பிழைப்பீர் என்று அவனுக்குச் சொல்லும்; ஆனாலும் அவன் சாகவே சாவான் என்பதைக் கர்த்தர் எனக்குக் காண்பித்தார் என்றான்.

பின்பு தேவனுடைய மனுஷன்: தன் முகத்தைத் திருப்பாமல் ***அவன் சலித்துப் போகுமட்டும்*** அவனை நோக்கிக் கொண்டே ***அழுதான்***.

அப்பொழுது ஆசகேல்: என் ஆண்டவன் அழுகிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவன்: ***நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் செய்யும் தீங்கை நான் அறிந்தி ருக்கிறபடியால் அழுகிறேன்; நீ அவர்கள் வாலிபரைப் பட்டயத்தால் கொன்று, அவர்கள் குழந்தைகளைத் தரையோடே மோதி, அவர்கள் கர்ப்பவதிகளைக் கீறிப் போடுவாய்*** என்றான் 2 இராஜா.8:7-12.

இலங்கையில் யுத்தம் நடந்தது, 1971 ஆண்டுகளில் கிழக்கு, மேற்கு பாகிஸ்தான் யுத்தம் நடந்தது. சமீபத்தில் இஸ்ரவேல், இஸ்லாமிய தீவிரவாதிகள் யுத்தம் நடந்தது. சுமார் 50,000 ஜனங்கள் கொல்லப்பட்டார்கள். சில லட்சம் பேர் தங்கள் இருப்பிடங்களை விட்டு அகதி களாய் சென்றார்கள். ரஷ்யா உக்ரைன் போர் 1000 நாட்களை கடந்து நடந்து கொண்டிருக்கிறது.

யுத்தம் வந்தால் ஜனங்கள் கொல்லப்படுவார்கள். ஸ்திரீகள் அவமானப்படுத்தப்படுவார்கள். இந்தச் செய்தியின் பிந்தின பகுதியிலும் இதை நாம் பார்ப்போம். வரப்போகும் அழிவை அறிந்த எலிசா தீர்க்கதரிசி, **சலித்து போகு மட்டும் அழுதான்**; அதுபோல நீங்களும் நானும் அழவேண்டாமா?

அன்று நினிவே அழிவை கண்டே
அன்பே இரங்கினீரே
யோனா உரைத்த தம் ஆலோசனை தந்து
ஏழை ஜெபங்கேளுமே

இரங்குமே என் இயேசுவே
இரக்கத்தின் ஐஸ்வரியமே
கூவி கதறியே இராவும் பகலுமே
கெஞ்சும் ஜெபம் கேளுமே

4. அறிக்கையிட்டு அழுதான்

1. இஸ்ரவேல் ஜனங்களின் அருவருப்பு களை அறிந்த எஸ்றா

இவைகள் செய்து முடித்த பின்பு, பிரபுக்கள் என்னிடத்தில் சேர்ந்து: இஸ்ரவேல் ஜனங்களும், ஆசாரியரும் லேவியரும் ஆகிய இவர்கள், கானா னியர், ஏத்தியர், பெரிசியர், எபூசியர், அம்மோனியர், மோவாபியர், எகிப்தியர், அம்மோரியர், என்னும் இந்தத் தேசங் களின் ஜனங்களுக்கும், அவர்களுடைய அருவருப்புகளுக்கும் விலகியிருக்க வில்லை ... என்றார்கள் எஸ்றா 9:1.

2. வஸ்திரத்தை கிழித்த எஸ்றா

இந்த வர்த்தமானத்தை நான் கேட்டபொழுது, என் வஸ்திரத்தையும் என் சால்வையையும் நான் கிழித்து, என் தலையிலும் என் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கித் திகைத்தவனாய் உட்கார்ந்திருந்தேன் எஸ்றா 9:3

3. முழங்காற்படியிட்ட எஸ்றா

அந்திப்பலி நேரத்திலே நான் துக்கத்தோடே எழுந்து, கிழித்துக் கொண்ட வஸ்திரத்தோடும் சால்வை யோடும் முழங்காற்படியிட்டு, என் கைகளை என் தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரித்து: எஸ்றா 9:5.

4. அறிக்கையிட்ட எஸ்றா

என் தேவனே, நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன்; எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெருகிற்று; எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்து போயிற்று எஸ்றா 9:6.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

5. அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்து கிடந்த எஸ்றா

எஸ்றா இப்படி விண்ணப்பம் பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்து கிடக்கையில், இஸ்ரவேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழுதார்கள் எஸ்றா 10:1.

5. பாதங்களில் விழுந்து அழுதாள்

1. அறிவிக்கப்பட்ட அழிவு

ஆதாம் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதிமூன்றாந் தேதியாகிய ஒரே நாளிலே சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிற்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும், அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது எஸ்தர் 3:13.

2. வஸ்திரங்களைக் கிழித்த மொர்தெகாய்

நடந்த யாவற்றையும் மொர்தெகாய் அறிந்த போது, மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக் கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப் போய், துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக் கொண்டு, எஸ்தர் 4:1.

3. எச்சரிக்கப்பட்ட எஸ்தர்

நீ இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்கு தெரியும், என்று சொல்லச் சொன்னான் எஸ்தர் 4:14.

4. அர்ப்பணித்த எஸ்தர்

நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள் எஸ்தர் 4:16.

5. பாதங்களில் விழுந்து அழுத எஸ்தர்

பின்னும் எஸ்தர் ராஜ சமுகத்தில் பேசி, ***அவன் பாதங்களில் விழுந்து அழுது,*** ஆகாகியனான ஆமானின் தீவினையையும் அவன் யூதருக்கு விரோதஞ் செய்ய யோசித்த யோசனையையும் பரிகரிக்க அவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினாள்.

என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக் கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக் கூடும்? என்றாள் எஸ்தர் 8:3,6.

1. என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே
என் உயிர்த் தந்தேன் மன்னுயிர்க்கே
என் துயர தொனியோ இதை யார் இன்று
கேட்பாரோ
என் காரியமாக யாரை அழைப்பேன்
என்றீரே வந்தேனிதோ

அழைத்தீரே இயேசுவே
அன்போடே என்னை அழைத்தீரே
ஆண்டவர் சேவையிலே மரிப்பேனே
ஆயத்தமானேன் தேவே

2. ஆடம்பரங்கள் மேட்டிமைகள்
ஆசாபாசங்கள் பெருகிடுதே
ஆயிரம் ஆயிரமே நரகவழி போகின்றாரே
ஆ! நீரேயல்லாமல் யாருண்டு மீட்க
ஆண்டவரே இரங்கும்

6. இவைகளினிமித்தம் நான் அழுகிறேன்

பின்பு பாபிலோன் ராஜா சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டினான்; யூதாவின் பிரபுக்களெல்லாரையும் ரிப்லாவிலே வெட்டினான்.

சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி அவனுக்கு இரண்டு விலங்குகளைப் போடுவித்தான்; பின்பு பாபிலோன் ராஜா அவனைப் பாபிலோனுக்கு கொண்டு போய், அவன் மரணமடையும் நாள் மட்டும் அவனைக் காவல் வீட்டில் அடைத்து வைத்தான்.

ஐந்தாம் மாதம் பத்தாந் தேதியிலே, பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக நிற்கிறவனாகிய காவற்சேனாதிபதியான நேபுசராதான் எருசலேமுக்கு வந்தான்; அது நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா பாபிலோனை அரசாளுகிற பத்தொன்பதாம் வருஷமாயிருந்தது.

அவன் கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும், எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும், ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டான்.

காவற் சேனாதிபதியோடிருந்த கல்தேயரின் இராணுவத்தாரெல்லாரும் எருசலேமைச் சுற்றிலும் இருந்த அலங்கங்களை இடித்துப் போட்டார்கள்.

ஜனத்தில் ஏழைகளான சிலரையும் நகரத்தில் மீதியான மற்ற ஜனத்தையும், பாபிலோன் ராஜாவின் வசமாக ஓடிவந்து விட்டவர்களையும், மற்ற ஜனங்களையும் காவற் சேனாதிபதியாகிய நேபுசராதான் சிறைகளாகக் கொண்டு போனான் எரேமியா 52:10-15.

சீயோனில் இருந்த ஸ்திரீகளையும் யூதா பட்டணங்களில் இருந்த கன்னிகைகளையும் அவமானப்படுத்தினார்கள் புலம்பல் 5:11.

காரணம் என்ன?

எருசலேம் மிகுதியாய்ப் பாவஞ் செய்தாள் புலம்பல் 1:8.

எரேமியா செய்தது என்ன?

இவைகளினிமித்தம் நான் அழுகிறேன்; என் கண், என் கண்ணே நீராய்ச் சொரிகிறது புலம்பல் 1:16.

... சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்பு விழி சும்மாயிருக்க வொட்டாதே,

எழுந்திரு, இராத்திரியிலே முதற் சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு; புலம்பல் 2:18,19.

அன்பே கல்வாரி அன்பே
உம்மை பார்க்கையிலே
என் உள்ளம் உடையுதப்பா

1. தாகம் தாகம் என்றீர்
எனக்காய் ஏங்கி நின்றீர்
பாவங்கள் சுமந்தீர்
பரிகார பலியானீர் - எங்கள்

2. காயங்கள் பார்க்கின்றேன்
கண்ணீர் வடிக்கின்றேன்
தூய திரு இரத்தமே
துடிக்கும் தாயுள்ளமே - உந்தன்

3. அணைக்கும் கரங்களிலே
ஆணிகளா சுவாமி?
நினைத்து பார்க்கையிலே
நெஞ்சம் உருகுதையா - உம்மை

4. நெஞ்சிலே ஓர் ஊற்று
நதியாய் பாயுதையா
மனிதர்கள் மூழ்கணுமே
மறுரூபம் ஆகணுமே - எல்லா

7. இயேசு கண்ணீர் விட்டார் JESUS wept

அப்பொழுது, வீட்டிலே அவளுடனே கூட இருந்து அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்த யூதர்கள், மரியாள் சீக்கிரமாய் எழுந்து போகிறதைக் கண்டு: அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்கு பின்னே போனார்கள்.

இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்க மாட்டான் என்றாள்.

அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து:

அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள்.

இயேசு கண்ணீர் விட்டார் யோவான் 11:31-35.

இயேசு கண்ணீர் விட்டழுதார்

அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது,

உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.

உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில் போட்டு, உன்னை வளைத்துக் கொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி,

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப் போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார் லூக். 19:41-44.

இயேசு கண்ணீரோடு விண்ணப்பம் பண்ணினார்

அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,

அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு,

தாம் பூரணரான பின்பு, தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,

மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார் எபி. 5:7-10.

1.கெத்சமெனே பூங்காவினில் கதறி அழும் ஓசை
எத்திசையும் தொனிக்கின்றதே
எங்கள் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே
கர்த்தா உம்பாடுகள் இப்போதும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

2.எம்மையும் உம்மைப் போல் மாற்றிடவே
உம் ஜீவன் தந்தீரன்றோ
எங்களை தரைமட்டும் தாழ்த்துகின்றோம்
தந்துவிட்டோம் அன்பின் கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும்

இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றார் லூக்கா 23:28.

❖ காஷ்மீர்க்காக ஜெபியுங்கள்

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

அலுவலகம் : **95432 21008**
உதவி : **94897 40295**

அதோனிராம் மற்றும் ஆன் ஜட்ஸன் (பாகம் 1)

பர்மாவுக்கு மிஷனெறிகள்

Adoniram and Ann Judson (Part 1) Missionaries to Burma

T.W. Engstrom

அனைத்து மிஷனெறிகளிலும் அதோனிராம் மற்றும் ஆன் ஜட்ஸன் ஆகிய பர்மாவுக்குச் சென்ற மிஷனெறிகள் விசேஷித்த சாட்சியுடையவர்கள். முன்னோடிகளான அவர்களது வாழ்வு முற்றிலும் அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. அவர்களது துணிவு, தேவனிடத்திலிருந்த விசுவாசம், உற்சாகமான ஆவி, சவாலாகவும் தூண்டுதலாகவும் அவர்களைப் பின்பற்றியவர்களுக்காகவும் இன்னும் பின்பற்றப் போகிறவர்களுக்காகவும், சுவிசேஷத்தை உலகெங்கும் பரப்ப விரும்புகிறவர்களுக்கும் இருக்கிறது.

அதோனிராமின் இளமை ஆண்டுகள்

ஒரு கண்டிப்பும், நிலையானவருமான காங்கிரிகேஷன் போதகருடைய மூத்த மகனாக மாசசூசெட்ஸிலுள்ள மால்டன் என்னுமிடத்தில் 1788-ம் ஆண்டு ஆகஸ்ட் 9ம் நாள் பிறந்தார். அவர் ஒரு அசாதாரண பிள்ளையாயிருந்தார். அவரை ஒரு அதிசயப் பிறவி என்று சொல்லலாம். இளம் பருவத்திலேயே தாயார் அவருக்கு வாசிக்கக் கற்றுக் கொடுத்தார். ஒரு முறை ஒரு பிரயாணத்திலிருந்து திருப்பிய போது அவரது தந்தை தன் மூன்று வயது மகன் வேத புத்தகத்திலிருந்து ஒரு அதிகாரம் முழுவதையும் வாசிக்கக் கேட்டு ஆச்சரியமடைந்தார். அவர் எப்போதும் படிப்பாளியான இளம் சிறுவனாக இருந்தார். படிப்பதிலும் வாசிப்பதிலும் பிள்ளைகளோடு விளையாடுவதை விட அதிக கவனம் செலுத்தினார்.

பதினாறு வயதில் இப்போது பிரௌன் பல்கலைக்கழகம் என அழைக்கப்படும் பிராவிடென்ஸ் கல்லூரியில் சேர்ந்தார். அவர் ஒரு புத்திசாலியான மாணவராக கல்லூரியில் தனிச்சிறப்பைப் பெற்றார். கல்லூரியின் இறுதி ஆண்டில் மிக உயரிய மாணவர் பெறும் (Scholorship) உபகாரத் தொகை வாலிடிக்டோரியன் என்ற பெயரில் வழங்கப்பட்டது.

இளைஞன் அதோனிராம் பட்டப் படிப்பிற்குப் பின்பு வாழ்வில் என்ன செய்வது என்பதில் திட்டம் இல்லாதிருந்தார். அவரது ஆசைகளில் சட்டம் படிப்பதும் நாவல்கள் எழுதுவதும் இருந்தன. அவரது கல்லூரி நாட்களில் அவர் அநேக நாஸ்திக கருத்துக்களை உள்வாங்கியிருந்தார். நாஸ்திகத்தின் விதைகள் பிரஞ்சு புரட்சியின் விளைவுகளாயிருந்தன. அது ஐக்கிய நாடுகளுக்குள் நுழைந்து தேசம் முழுவதும் பரவிவிட்டது. ஜட்ஸனுடைய மிக நெருங்கிய நண்பனும் கல்லூரியில் சமவகுப்பில் படித்தவனுமாகிய ஒருவன் 'புதிய சிந்தனையில்' உதித்தவன். அவனுடைய தாக்கம் ஜட்ஸனுக்கு அதிகமாயிருந்தது. எனவே நண்பனைப் போலவே ஒரு அவிசுவாசி ஆக நேரிட்டது.

ஜட்ஸன் அமைதியற்ற தன்மை படைத்தவர். நாட்டைச் சுற்றித்திரிவது அவரது வழக்கம். பட்டப்படிப்பு முடிந்ததும் நியூயார்க் சென்று ஒரு சினிமா கம்பெனியில் சேர தீர்மானித்தார். "தன்னை அவர்களது ஒழுங்குகளோடு பழக்கப்படுத்திக் கொள்ளவும் தனது இலக்கியவாத பணியை தொடரவும், அவர் ஆர்வத்தோடும் தீரச்செயல் செய்யும் ஆசையிலும்" இப்படிச் செய்ததாக அவர் கூறினார். இந்தக் குழுவினரோடு சிறிது காலம் மட்டுமிருந்தார். விரைவில் சோர்ந்து போய்விட்டார்.

நியூயார்க் நகரை விட்டு அவர் ஒரு சத்திரத்தில் தங்கினார். அவர் தங்கிய அறையின் அடுத்த அறையில் ஒரு மனிதன் மரணத்தருவாயிலிருந்தார். அவரது வேதனைக் குரலைக் கேட்க நேரிட்டது. காலையில் மரித்துப் போன அம்மனிதன் அவனது கல்லூரி நாஸ்திக நண்பன் என அறிந்து திடுக்கிட்டார். உடனே அந்த சத்திரத்தை விட்டு வெளியேறினார். ஆழமான சிந்தனையில் ஈடுபட்டார். "மரித்தார்- இழந்து போனார் - இழந்து போனார்" என்ற வார்த்தைகள் அவரது செவிகளில் தொனித்துக் கொண்டே இருந்தது. அவர், தாம் தனது சிந்தனையில் அலைந்து போய்விட்டார் என்றும் உண்மையில் நாஸ்திகப் போதனைகள் முற்றிலும் தவறு என்றும் உணர்ந்தார்.

இந்த குறிப்பிட்ட நிகழ்வு அவர் கிறிஸ்தவ சேவைக்காக ஆன்டோவர் கல்லூரியில் மாணவராகப் பிரவேசிக்கக் காரணமாயிற்று. அவர் 'மறுபடியும் பிறந்த' கிறிஸ்தவரல்ல. ஆனால் இக் கல்லூரியில் சேர்ந்த ஆறு வாரங்களில் டிசம்பர் 2-ம் நாள் ஆண்டவராகிய இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தேவ பணிக்குத் தமது வாழ்வை அர்ப்பணம் செய்தார். அதே வேளையில் அவரது தந்தை பணியாற்றிய சபையில் அங்கமானார். தனது பாவங்களின் மன்னிப்புக்காக அவர் நாடி தன் வாழ்வை தேவ சேவைக்காக அர்ப்பணித்தது குறிப்பிடத்தக்கதாகும். இப்போது அவர் புகழ், பெருமை ஆகியவற்றை நாடவில்லை. தேவ சித்தத்தின் படி தனது வாழ்வை அமைக்க ஆசைப்பட்டார்.

மிஷனெறி பணிக்கு அழைக்கப்பட்டார்

மனமாற்றத்திற்குப் பின்பு மிஷனெறி சேவையைக் குறித்து சிந்திக்க ஆரம்பித்தார். தேவன் திடீரென ஒருநாள் அவரிடம் பேசி மிஷனெறியாகக் கடல் கடந்து செல்ல அழைத்தார். அக்கால கட்டத்தில் அமெரிக்காவிலிருந்து மிஷனெறிகளை அனுப்பும் குழுக்கள் இருக்கவில்லை. ஜட்ஸனோடு தேவன் பேசிக்கொண்டிருந்த அதே வேளையில் வில்லியம் கல்லூரியிலுள்ள மூன்று வாலிபர்களோடும் பேசினார். சாமுவேல் J.மில்ஸ், ஜேம்ஸ் றிச்சார்ட்ஸ் மற்றும் லூதர் றைஸ் ஆகிய மூவரும் ஒரு மிஷனெறி சங்கத்தை அந்தப் பள்ளியிலேயே நிறுவினர். சிறிது காலத்திலே இந்த மூன்று வாலிபரும் ஜட்ஸன் கற்றுக் கொண்டிருக்கும் ஆண்டோவர் கல்லூரிக்கு தங்கள் இறையியல் பயிற்சியை முடிக்கும் போது வந்தனர். இந்த நான்கு வாலிபரின் உற்சாகத்தால் தான் அமெரிக்கன் போர்டு ஆப் மிஷன் ஒழுங்கானது.

ஜட்ஸன் மிஷனெறியாகும் தீர்மானம் பெற்றோருக்கு ஏமாற்றமாயிருந்தது. முடியாததும் பயனற்றதுமான இந்தப் பணியில் திறமைமிக்க தங்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மகன் பிரவேசிப்பது அவர்களால் சகிக்கக் கூடாதிருந்தது. ஆனால் வாலிபர் ஜட்ஸன் சந்தேகமின்றி இது தேவ அழைப்பு என அறிந்து எந்த நிலையிலும் அவருக்கே பணிசெய்ய தீர்மானம் எடுத்து விட்டார்.

அமெரிக்கன் போர்டு ஆப் மிஷன் ஸ்தாபிக்கப்பட்டவுடனே அது ஜட்ஸனை இங்கிலாந்துக்கு, அவர் லண்டன் மிஷனெறி சங்கத்துடன் தொடர்பு கொண்டு அமெரிக்கன் போர்டுக்கு பணம் சேகரிக்க முடியுமா? என்றும், ஒரு பணி உடன்பாடு செய்ய முடியுமா என்னும் வேண்டுதலோடு அனுப்பப் பட்டார். லண்டன் மிஷனெறி சங்கம் அவரை நியமித்து அவர்களது மேற் பார்வையில் பிறநாடுகளுக்கு அனுப்பு வதாக அறிக்கையை ஜட்சன் கொண்டு வந்தார். இது அமெரிக்கன் போர்டு ஆப் மிஷன் விரும்பியதல்ல. எனினும் இதன் நோக்கம் தங்களது தலைமையில் சுயாதீனமாக வாலிபர்கள் அமெரிக்கன் மிஷன் போர்டு என்ற பெயரில் அனுப் பப்பட வேண்டும் என்பதாகும். இந்த நான்கு வாலிபர்களும் வேறு சிலரும் நியூ இங்கிலாந்தின் சில சபைகளுக்கு இத்தகைய குழுவின் மிஷனெறி திட்டத்தின் தேவைகளை முன் வைக்க தீர்மானித்தனர். அமெரிக்கர்களின் தலைமையில் வேலையாட்களை அறு வடைக்காக அனுப்ப பணம் திரட்டினர். எந்தப் பீடங்களிலெல்லாம் பேச வாய்ப்புக் கிடைத்ததோ அங்கெல்லாம் சென்று ஊழியத்தைக் குறித்துப் பேசினர்.

ஒரு குறிப்பிட்ட ஞாயிறு ஜட்சன் மாசச்சூசட்ஸிலுள்ள பிராட்போர்டு சென்றார். அமெரிக்கன் போர்டு ஆப் மிஷன்களைக் குறித்துப் பேச நண்பர் களோடு சென்றார். ஹாஸல்டைன் என்ற ஒருவர் வீட்டில் அவர்கள் உபசரிக்கப் பட்டார்கள். அவருக்கு இரண்டு வாலிபப் பிள்ளைகளிருந்தனர். அவர்களில் ஒருவர் அழகிய, பழுப்பு நிறகண் களையும், சுருண்ட கூந்தலையும் உடையவராயிருந்தார். அவள் அதோனிராம் கண்களுக்குப் பிரியமாக புலப்பட்டாள். அவள் பெயர் ஆன். அவள் உற்சாகம் மிகுந்தவளும் வீரச்செயல் புரியும் ஆவல் உள்ளவளுமாயிருந்தாள். ஜட்சனுடைய கவனம் அவள் மீதிருந்தது. அவர் அதே இடத்தில் அவளுக்கு ஒரு பாடலை எழுதிக் கொடுத்தார். விரைவில் இருவரும் திருமணம் செய்து கொண் டனர். **ஆன் ஹாஸல்டைன் ஜட்ஸன்** முதல் பெண் மிஷனெறியானார்.

ஆனின் ஆரம்ப வருடங்கள்

ஆன் ஹாஸல்டைன் மாசசூ செட்ஸிலுள்ள பிராட்போர்டு என்னு மிடத்தில் 1789-ம் ஆண்டு டிசம்பர் 23-ல் பிறந்தார். அவள் தாலந்துகள் படைத்த புத்திசாலியான மாணவியாக பிராட்போர்டில் ஆரம்பக் கல்வி பெற்றார். சிறுமியாக இருக்கும் போது அமைத லற்றவளாயிருப்பாள். ஒரு முறை தாயார் அவளிடம்: "நீ விரைவில் அலைந்து திரிவதையே விரும்புவாய்" என்று கூறினார்கள். ஆனால் பின் நாட்களில் அவளிடம் மாற்றங்கள்!

அவள் பதினேழு வயதாகுமுன் ஆவிக்குரிய காரியங்களில் அதிக உற்சாக மாயிருந்தாள். நற்காரியங்களை மிகுதி யாய்ச் செய்வதால் தேவராஜ்யத்துக்குத் தன்னை ஆயத்தப்படுத்திவிடலாம் என எண்ணியிருந்தாள். தனது சொந்தப் பட்டணத்தில் நடந்த ஒரு எழுப்புதல் கூடுகையில் அவள் நற்கிரியைகளினால் அல்ல தேவ கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் என்று உணர்ந் தாள். அந்த கூடுகையின் முடிவில் தனது உள்ளத்தையும் ஜீவியத்தையும் கிறிஸ்து வுக்கு ஒப்படைத்து, சுவிசேஷம் அறிவிக்க தனது எல்லா வலிமை களையும் பயன்படுத்த ஒப்புவித்தாள்.

அவள் பதினெட்டு வயதானபோது சேலம், ஹளவர்ஹில், நியூபெரி போன்ற பள்ளிகளில் கற்பிக்க ஆரம்பித்தாள். அப்போது அவள் கையில் **டேவிட் பிரெய்னார்டு** என்றவரின் வாழ்க்கை புத்தகம் கிடைத்தது. அதை வாசித்த போது தனது வாழ்வில் ஆண்டவர் அவளை மிஷனெறியாக உபயோகப் படுத்த விரும்புகிறார் என்று உணர்ந்தாள். இரண்டு மூன்று ஆண்டுகள் பள்ளிகளில் ஆசிரியையாகப் பணியாற்றிய பின்பு அவள் மறக்க முடியாத பிராட்போர்டு பயணத்தை ஆரம்பித்தார்.

நல்ல போராட்டம் போராடுதல்

Fight the good fight

J.C.Ryle (1816 - 1900)

கிறிஸ்தவ போராட்டம் ஒரு எளி தான விஷயமல்ல. வேத வாக்கியங்கள் இதைக் குறித்து என்ன சொல்லுகின்றன?

"விசுவாசத்தின் நல்ல போராட் டத்தைப் போராடு. நித்திய ஜீவனை பற்றிக் கொள்" 1தீமோ.6:12. "நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கனுபவி" 2தீமோ.2:3. "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங் களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங் களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால் தீங்கு நாளில் அவை களை நீங்கள் எதிர்க்கவும் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்க்கவும் திராணியுள்ளவர்களாயிருக்கும்படிக்கு தேவனுடையசர்வாயுதத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்" எபேசி.6:11-13. "இடுக்க மான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்" லூக்.13:24. "விழித் திருங்கள், விசுவாசத்திலே நிலைத் திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்" 1கொரி.16:13. "...நீ நல்ல போராட்டம் பண்ணும்படி இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன்; நீ விசுவாசமும், நல்மனசாட்சியும் உடையவனாயிரு" 1தீமோ.1:18-19.

வசனத்திலும் கிறிஸ்துவிலும் விசுவாசம்

உத்தம கிறிஸ்தவ வாழ்வுதான் விசுவாச போராட்டம். இந்த விதத்தில் கிறிஸ்தவ போராட்டம் முற்றிலும் உலக சச்சரவுகளை விட வேறுபட்டது. பெலமான ஆயுதங்கள், கூரிய பார்வை, வேகமான கால்கள் இவை முக்கியமல்ல. மாம்சத்துக்குரிய ஆயுதங்களும் பயன் படுவதில்லை. ஆவிக்குரிய ஆயுதங்களே பயன்படுத்தப்பட வேண்டும். எல்லா வற்றிற்கும் மேலாக வெற்றிக்கு விசுவாசம் அடிப்படையாயிருக்கிறது.

கிறிஸ்தவ வீரனுக்கு அடிப்படை தேவை தேவனுடைய வார்த்தைகளின் மீதுள்ள விசுவாசம். அவன் இருக்கிறது போல இருக்கிறான், செய்வதைச் செய்கிறான், சிந்திக்கிறதை சிந்திக்கிறான், செயல்படுவது போல செயல்படுகிறான், நம்புவதைப் போல நம்புகிறான், நடந்து கொள்வது போல நடந்து கொள்கிறான். அதற்கு ஒரே ஒரு காரணம்: பரிசுத்த வேத வாக்கியங்களில் கூறப்படுகிற ஆலோ சனைகளை விசுவாசிக்கிறான். "... தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண் டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர் களுக்குப் பலன் அளிக்கிறாரென்றும் விசுவாசிக்க வேண்டும்" எபி.11:6.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வின் நபரத்துவத்தில், அவரது பணியில் விசேஷித்த விசுவாசம் வைப்பது, ஜீவனும் இருதயமும் முக்கிய நீரூற்று மாய் இருப்பது ஒரு படை வீரனின் குணாதிசயம். அவரை விசுவாசத்தினால் காணப்படாத இரட்சகராகவும், அன்பி னால் தம்மை அர்ப்பணித்தவராகவும், தனது கடன்களையெல்லாம் கொடுத்துத் தீர்த்தவராகவும், நமது பாவங்களை சுமந்து தீர்க்கிறவராகவும், மீறுதல்களை மன்னிக்கிறவராகவும், தனக்காக உயிரோ டெழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து பரிந்து பேசுகிறவராகவும் காண்கிறான்.

அவரைப் பார்த்து அவரைப் பற்றிக் கொள்ளுகிறான். இரட்சகரைப் பார்த்துக் கொண்டும் நம்பிக் கொண்டுமிருப்பதால் சமாதானத்தையும் நம்பிக்கையும் உணர்ந்து, விருப்பத்துடன் தன் ஆத்து மாவின் சத்துருக்களுக்கு எதிராகப் போரி டுகிறான். தனது ஏராளமான பாவங்கள், பெலவீனமான இருதயம், சோதிக்கும் உலகம், சுறுசுறுப்பாய் செயல்படும் சாத்தான் இவைகளையே பார்த்துக் கொண்டிருந்தால் சோர்புதான் ஏற்படும். ஆனால் அவனோ ஒரு பலத்த இரட்சகர் - மன்றாடும் இரட்சகர், பரிதாபம் கொள்பவர் - அவரது இரத்தம், அவரது நீதி, அவரது நித்திய ஆசாரியத்துவம் எல்லாம் தனக்குரியது என விசுவாசிக் கிறான். அவன் இயேசுவைப் பார்த்து தனது பாரத்தை அவர் மேல் போட்டு

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுகிறான். அவரை நோக்கி மகிழ்ச்சியுடன் போரைத் தொடருகிறான். "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்" ரோமர் 8:37.

கிறிஸ்தவ வீரன் வெற்றியுடன் போராட கிறிஸ்துவின் பிரசன்னத்திலும் அவர் எப்போதும் உதவி செய்ய ஆயத்தமாயிருப்பதிலும் வழக்கமான உயிருள்ள விசுவாசம் கிறிஸ்துவின் மேலிருக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பும் தொடர் பாதுகாவலும் உண்டென்ற உறுதியுடனிருப்பவன் யுத்தத்தில் கவலையுடன் உட்கார்ந்திருப்பதில்லை. தனது களைப்பு, விழித்திருத்தல், பாடுபடுதல், பாவத்திற்கு எதிரான போராட்டம் இவற்றில் தன்னில் வாசம் செய்யும் கிறிஸ்துவிலுள்ள உறுதியால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

'விசுவாசமாகிய கேடயம்' பொல்லாங்கன் எய்யும் அக்கினி அஸ்திரங்களைத் தடுக்கும். இத்தகைய மனிதன் தான், "நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று நானறிவேன்" என்று சொல்ல முடியும்: பாடுகளின் மத்தியில் இப்படிக் கூறமுடியும். "... இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை" 2 தீமோ.1:12. அவரே இப்படியும் எழுதுகிறார்: "ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" 2கொரி.4:18 "தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" கலா.2:20. "...அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்துக்கு சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" கலா.6:14. "கிறிஸ்து எனக்கு ஜீவன்..." பிலி.1:21. "... ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்" பிலிப்.4:11. "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலி.4:13. விசுவாசம் அதிகரிக்க அதிகரிக்க மேலும் வெற்றி! விசுவாசம் பெருகப் பெருக இன்னும் அதிகமான உள்ளான சமாதானம்!

ஒரு கிறிஸ்தவ வீரன் வெற்றியுடன் போரில் முன்னேற, அவனது விசுவாசம் தொடர்ந்து பெருக வேண்டும். அவன் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். கிறிஸ்துவை நெருங்கி வாழ்நாள் முழுவதும் அவரைப் பற்றிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் சீஷர்கள் கேட்டது போல " **ஆண்டவரே எங்கள் விசுவாசத்தைப் பெருகப் பண்ணும்**" *(லூக்.17:5)* என்று கேட்க வேண்டும். உங்கள் விசுவாசத்தை விழிப்புடன் கவனியுங்கள். அதுதான் கிறிஸ்தவ குணாதிசயமாகிய கோட்டைக்கு முழு பாதுகாவலாயிருக்கிறது. இந்தப் புள்ளியைத் தான் சாத்தான் குறிவைத்துத் தாக்குகிறான். எல்லாமே அவருடைய இரக்கம், அல்லாவிட்டால் விசுவாசம் தூக்கி எறியப்பட்டுவிடும்.

மேலும் நாம் வெற்றியுடன் போராட தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ள வேண்டும். அதை ஒரு போதும் அகற்றக் கூடாது. அதிலுள்ள ஒரு சிறு பகுதியைக் கூட ஒதுக்கக்கூடாது. சத்தியம் என்னும் இடைக்கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், விசுவாசம் என்னும் கேடயம், ஆவியின் பட்டயமாகிய வேதவசனம், இரட்சணியம் என்னும் தலைச்சீரா ஒவ்வொன்றும் தேவையானவை. **'பரலோகில் போராயுதங்களோடு நாம் இருப்பதில்லை, ஆனால் பதிலாக மகிமையின் அங்கி கிடைக்கும். இங்கோ இரவும் பகலும் ஆயுதங்களை நாம் அணிந்திருக்க வேண்டும். நாம் நடக்க வேண்டும், பணி செய்ய வேண்டும், தூங்க வேண்டும். எல்லாம் இந்த ஆயுதங்களோடுதான். அப்படியில்லாவிட்டால் நாம் கிறிஸ்துவின் உத்தம போர் வீரரல்ல.'**

கிறிஸ்துவினால் நாம் ஜெயம் கொள்ளுகிறவர்கள்

நமது அன்பான இரட்சகரின் கண்கள் நம்மேல் காலையிலும், பகலிலும் இரவிலும் கண்ணோக்கமாயிருக்கின்றன. நம்மைத் திராணிக்கு மேல் சோதிக்கமாட்டார். நமது பெலவீன உணர்வுகள் அவரைத் தொடுகின்றன. ஏனென்றால் அவரும் பாடுபட்டவர். அவர் பட்ட பாடுகளும் இந்த உலகத்தின் அதிபதியால்தான் ஏற்பட்டன. எனவே, "இயேசு என்னும் பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியால். நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம்" எபி.4:14.

ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் இதே போராட்டத்தை, அவர்களை நேசித்த தேவனால் முற்றிலும் ஜெயங் கொள்ளுகிறவர்களாக முடித்திருக்கிறார்கள். அவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் வெற்றி பெற்றது போல நாமும் வெற்றி பெற வேண்டும். கிறிஸ்துவின் புஜம் எப்போதும் உறுதியாயிருக்கிறது. அவரது இருதயமும் எப்போதும் அன்பு நிறைந்ததாயிருக்கிறது. நமது முன்னோரை இரட்சித்த அவர் என்றென்றும் மாறாதவர். "அவர் எப்பொழுதும்உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்கவல்லவராயுமிருக்கிறார்" எபி.7:25. எனவே சந்தேகங்களையும் பயங்களையும் விட்டுவிடுவோம். வாக்குத்தத்தங்களை விசுவாசத்தினாலும் பொறுமையினாலும் பெற்றுக் கொண்டவர்களை நாமும் பின்பற்றுவோம்.

இறுதியாக காலம் கடைசியாயிருக்கிறது, ஆண்டவருடைய வருகையும் சமீபம் என்பதை நினைவு கூருவோம். கடைசி எக்காளம் ஊதப்போகிறது. சமாதானப் பிரபு ஆட்சி செய்யவிருக்கிறார். இன்னும்சில போர்கள்தான் பின்பு சேனைத் தலைவன் இவ்வாறு சொல்லுவார்: வெளி.21:7 எடுத்துப் படியுங்கள். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.

கிறிஸ்துவின் பரிபூரணம் - பரிசுத்தவான்களின் கஜானா

Christ's fullness - The Saint's Treasury

Charles H. Spurgeon

"சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும் ...பிரியமாயிற்று" கொலோ.1:19.

"அவருடைய பரிபூரணத்தினால் கிருபை மேல் கிருபை பெற்றோம்" யோவா.1:16.

இயேசுவில் அளவிலடங்கா பரிபூரணம் இருக்கிறது. கிருபையின் உயர்ந்த நிலையை அடைய எந்த தேவபிள்ளையும் எப்போதும் பெற்றுக்கொள்ளலாம். பாவம் மேற்கொள்ளப்பட வேண்டுமானால் அதை மேற்கொள்ளும்வலிமை அவரிடம் பரிபூரணமாக உள்ளது. நற்குணம் வேண்டுமா, சுத்திகரிக்கும் வல்லமை கிறிஸ்துவில் பரிபூரணமாக உள்ளது. எனது மாம்சத்தில் வல்லமை இல்லை, நான் வெறுமையாயிருக்கிறேன் என்று உணரும் போது, எனது உள்ளத்தில் எழும்பும் வசனம், "என்னாலேயல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" யோவா.15:5 என்பதாகும். மாறாக எல்லாவற்றையும் செய்யும் வலிமை கிறிஸ்துவிலிருக்கிறது. அந்த வல்லமை, பரிசுத்தமான நீரோட்டமாக அவரிலிருந்து பாய்ந்து வருகிறது. "தேவனால் எல்லாம் கூடும்" மத்.19:26. "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" கொலோ.2:9. அவரில் வாழுகிறவர்களுக்கு, மனிதனால் கூடாதவைகளை, அவர்கள் விசுவாசித்தால், அவர்களுக்கு எளிதில் சாதிக்க முடியும்.

நாம் பட்டினியாயிராமலிருக்க ஏதோ சிறிது உணவை மேஜை மீது வைப்பவரல்ல நமது கிறிஸ்து. கொழுத்த கன்றுகளும் எருதுகளும் அடிக்கப்பட்டு இரா போஜனம் தயாரிக்கப்பட்டுள்ளது. நமது நிர்வாணத்தை மூடும் அளவிலான ஒரு ஆடையல்ல, நமக்குத் தருவது மிகச்சிறந்த ஆடை. அதோடு காதணிகள், கழுத்துக்கேற்ற ஆபரணங்கள் மற்றும் தலையில் ராஜகிரீடம், ஏனெனில் அவருடைய பக்தர்கள் எல்லாவற்றிலும் பரிபூரணமாயிருப்பதுவே பரமபிதாவின் விருப்பம். இந்த ஐசுவரியங்கள் உங்களிடம் இல்லாவிட்டால் தவறு உங்களுடையது. விசுவாசத்தினால் நீங்கள் இவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பல வேளைகளில் நாம் குப்பை மேட்டிலிருந்துகொண்டு பிச்சைக்காரர்களைப் போல நம் இயற்கையின் ஏழ்மையால் புலம்புகிறோம். நாம் கர்த்தரில் சந்தோஷப்பட்டுகளிகூர வேண்டியவர்கள். மிகவும் சிறப்பான ஒரு ஈவு, நாம் இரட்சிக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவில் நீங்கள் அவருடைய ஐசுவரியத்தில் பரிபூரணமானவர்கள். எனவே எழுந்திருங்கள், கிறிஸ்து இயேசுவில் தேவனுடைய பரிபூரணத்தை அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தியம் என்னவெனில் கிறிஸ்துவில் ஒரு மிகமிக அபரிதமான விசை இருக்கிறது. அதை நாம் அறிந்து கொள்வது அவசியம். சபையிலுள்ள குழப்பங்களைப் பேசாதபடி, அதனாலுள்ள வேதனையை நம்மேல் எடுத்துக் கொள்ளாதபடி, கர்த்தர் தரும் மகிழ்ச்சியைப் பிடித்துக் கொண்டு அதன் பெலத்தால் நமது முயற்சிகளை மறந்து விடுவோம். அப்போது அந்த சந்தோஷம் மழைக்குப் பின்னால் மலைகளில் வடிந்தோடும் பிரளயத்தைப் போல இயேசுவின் வாழ்வு அதிக விசையுடன் நம்மில் பாய்ந்து ஓடும். தடைகளைக் கடந்து ஓடி, நமது ஆத்துமாக்களை விளிம்பு வரை நிரம்பச் செய்யும். கிறிஸ்துவில் பரிபூரண ஜீவன் இருக்கிறது என்ற சத்தியத்தையும் அதன் பெலத்தால் முன்னேறி உயர்ந்து செல்வோம்.

கிறிஸ்து கொடுக்க விரும்புமுள்ளவர்

பிதா தமது கிருபையை தமது குமாரன் மீது அன்பினால் வைத்திருக்கிறார். மகாப் பெரியவராகிய தேவன் குமாரனாகிய இயேசுவை தெய்வீகத்தின் பரிபூரணத்தால் அலங்கரிப்பதால் மகிழ்ச்சியடைகிறார். இயேசு விசுவாசிகளுக்கு தேவனுடைய மகா விஸ்தாரமான இருதயத்தை கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறார்.

நான் உங்களில் ஒரு பரிசுத்த ஆவலைத் தூண்டுகிறேன். கிறிஸ்தவ பக்குவமடைந்த உயர்நிலையை நீங்கள் அடைய உங்களைக் கிளறிவிட விரும்புகிறேன். நீங்கள் வீரமுள்ள கிறிஸ்தவ சேவை செய்ய வேண்டும். கிறிஸ்து உங்களுடையவர். அதனால் அவருடையவைகள் எல்லாம் உங்களுடையவைகள். "தம்முடைய சொந்த குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி? ரோமர்.8:32. இந்த வசனம் உங்கள் இருதயங்களில் பிரவேசிக்கட்டும். நீங்கள் ஜெபத்தில் தளர்ந்து, "இங்கே வேண்டாம், நான் இவ்வளவு உயரம் செல்ல தகுதியற்றவன்" என்று சொல்வீர்களானால், இயேசு பெரிய காரியங்களை கேட்கும்படி கூறுகிறார். ஏனெனில் அனேக ஈவுகளை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அதை எண்ணிப் பாருங்கள். பிதா தமது குமாரனை உங்களுக்குத் தந்திருக்கிறார். அவர் எதை உங்களுக்கு மறுக்க முடியும்?

எனது ஆண்டவரை இன்னும் அதிகமாக அறிய வாஞ்சிக்கிறேன். இம்மட்டும் அவருக்காக செய்தவற்றில் நான் திருப்தியற்றிருக்கிறேன். இன்னும் பத்துமடங்கு உழைக்கவும் அவரை மகிமைப்படுத்தவும் விரும்புகிறேன். நீங்கள் அப்படி விரும்புகிறீர்களா? அப்படியானால் அவர் உங்களோடு தொடர்பு வைத்துக் கொள்வார். நீங்கள் கேட்பதற்கும் நினைப்பதற்கும் அதிகமாகவும் அபரிதமாகவும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்.

பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்

பெரிய காரியங்களைப் பெற்றுக் கொள்ள விசுவாசியுங்கள். ஆண்டவர் நமக்குச் செய்ய விரும்பும் காரியங்களில் நமக்குப் பெரிய விசுவாசம் வேண்டும். இந்தப் பெரிய காரியங்களைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். ஆவிக்குரிய அற்புதங்கள் நடைபெற நாடுங்கள். சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். எனவே துணிச்சலுடன் பெரிய காரியங்களை நாம் எதிர்பார்க்கலாம்.

பெரிய காரியங்களை எதிர்பார்க்கிற நாம், பெரிய காரியங்களைச் செய்ய முயற்சிப்போம். தூய ஆவியானவரின் வல்லமையோடு பெரிய காரியங்களைச் செய்ய ஆயத்தமாவோம். கிறிஸ்துவுக்காக முழுமையான தகனபலியாக உங்களை அர்ப்பணிக்க விரும்புகிறீர்களா? கிறிஸ்துவுக்காக வாழவும் அவருக்காகவே மரிக்கவும் ஆயத்தமா?

உலகம் முழுவதிலும் நமக்காக சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் பரிபூரணத்தால் நிரம்பிய மக்கள் எழும்பட்டும். அவர்கள் இந்தப் பரிபூரண வாழ்வைப் பிறருக்கு அளிக்கட்டும். பரிபூரண வாழ்வால் நிரப்பப்பட்டவர்களால் பிதா மகிமைப்படுவாராக.

சோதனையாகிய பள்ளியில் முக்கியமான நான்கு காரியங்களுண்டு. அவை திட்டமான நோக்கம், ஒரு நல்ல பாட புத்தகம், ஒரு நல்ல ஆசிரியர், கல்வியை விருப்பத்தோடு கற்றுக் கொள்ளும் மாணவன்.

கிறிஸ்துவுக்கான புதிய அர்ப்பணம்

New Consecration to Christ

Lois Stucky (1928 -2014)

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" *மத்.16:24.*

கிறிஸ்து நமக்குச் சிறந்த முன்மாதிரியாய் இருக்கிறார். நாம் அவரைப் பின்பற்ற அழைக்கிறார். நாம்தான் தெரிந்து கொள்ள வேண்டும். 'ஆம் ஆண்டவரே' என்று சொல்லி அவரைப் பின்பற்ற அவர்தகுதியும் உத்தமமுடையவர். அவர் நம்மிடம் அதிகமாகக் கேட்கிறார். ஆனால் அவரை முழுமனதோடு பின்பற்றுகிறவர்களுக்கு அவர் மிக அதிகமாகக் கொடுக்கிறார். நாம் நம்மையும் நமக்குரியவைகளையும், நமக்குரிய எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணித்து அவரைப் பின்பற்ற காலமாயிருக்கிறது.

பவுல் தமது இணை ஊழியனுக்கு ஞானமும் சவாலும் நிறைந்த வார்த்தைகளை எழுதுகிறார்: "ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்திற்கும், சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னை சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாய் இருப்பான்" *2 தீமோ.2:20,21.*

எஜமானுடைய உபயோகத்துக்கும் எல்லா நற்கிரியைக்கும் ஆயத்தமான பாத்திரம்! இது கனத்துக்குரிய விருப்பம்! நமது எஜமான் உயர்த்தப்பட்டவர். பரலோக சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர், பிதாவின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர். இந்த ஆசை அதிக கிரயம் செலுத்த வேண்டியது. சிங்காசனத்தைப் பெற இரட்சகர் வேதனை நிறைந்த சிலுவை மரணத்தினை சகித்தார். அது போல அவரைப் பின்பற்றுகிறவர்களும் பழைய மனிதனை சிலுவையில் அறைய வேண்டும். சுயமும், சுய நோக்கும் சிலுவையிலறையப்பட வேண்டும். 'நானல்ல ஆனால் கிறிஸ்துவே' *கலா.2:20.*

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு: **விசுவாசம்**

'**விசுவாசமாகிய கேடயம்**' பொல்லாங்கன் எய்யும் அக்கினி அஸ்திரங்களைத் தடுக்கும்.

கிறிஸ்தவ வீரனுக்கு அடிப்படை தேவை தேவனுடைய வார்த்தைகளின் மீதுள்ள **விசுவாசம்**.

ஒரு கிறிஸ்தவ வீரன் வெற்றியுடன் போரில் முன்னேற, அவனது **விசுவாசம்** தொடர்ந்து பெருக வேண்டும்.

பெலமான ஆயுதங்கள், கூரிய பார்வை, வேகமான கால்கள் இவை முக்கியமல்ல. மாம்சத்துக்குரிய ஆயுதங்களும் பயன்படுவதில்லை. ஆவிக்குரிய ஆயுதங்களே பயன்படுத்தப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக வெற்றிக்கு **விசுவாசம்** அடிப்படையாயிருக்கிறது.

ஒவ்வொரு தேவ பிள்ளையும் எப்படியும் சோதனைப் பாடசாலையில் பிரவேசித்துதான் ஆக வேண்டும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason